முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1265

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.03.2023, வெள்ளிக்கிழமை

1. ஞானவேலிகொண்ட அரங்கனே
ஞானிகள் பலம் கொண்ட தேசிகனே
வானவர்கள் மெச்சும் வள்ளலே
வையகத்தை காக்கின்ற அண்ணலே
2. அண்ணலே ஆறுமுக அரங்கனே
அகிலமதில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
வல்லமைபட ஞான அறிவுரை ஆசி
வழங்குவேன் சுபகிருது சேல் திங்கள் தன்னில்
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 03 ம் நாள், 17.03.2023, வெள்ளிக்கிழமை)
3. தன்னிலே அரங்கனுக்கு சக்தி ஊட்டி
தண்டாயுதன் யான் ஆற்றலாக இருந்துவர
மண்ணுலகில் அரங்கன் பாதம் பற்றி
மாதவ பலன்வேண்டி இருப்பவரெல்லாம்
4. எல்லோர்க்கும் ஞானபலம் தர்மபலமும்
இணையில்லா சக்தியாக அணிவகுத்து
வல்லமைபட அவர்களெல்லாம் கலியுகத்தில்
வாழுங்காலமே ஞானிகளாக ஏற்றம் பெறக்கூடும்
5. கூடவே அரங்கனை தொடர்புகூட்டி
குவலயத்தார் தீட்சை உபதேசமோடு
நாடெங்கிலும் தர்மத்தைசெய்துகொண்டு
நன்மைதரும் சன்மார்க்க நெறியிலிருக்க
6. இருக்கவே உலகினில் இவர்களெல்லாம்
இனிதே அரங்கன் தேடுகின்ற வண்ணம்
கருத்தாக ஞானிகளாகி உலகமாற்றம்
கலியுகத்தில் செய்து சிறப்புகாண்பர்
7. காண்கவே அரங்கன் பலமே கலியுகத்தை வெல்லும் உயர் பலமாகும்
ஆன்மீக ஞானவழி அடையாளம் கண்டு அரங்கனைத்தேடி கண்டு வாழ்பவரெல்லாம்
எல்லோரும் ஞானிகளாக சிறந்து
இவ்வுலகில் அற்புதம் படைக்க நேரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–